




# நிறங்கள்

 இலை  பச்சை நிறம்

 மாம்பழம்  மஞ்சள் நிறம்

 கத்தரிக்காய்  ஊதா நிறம்

இலை பச்சை நிறம்.
மாம்பழம் மஞ்சள் நிறம்.
கத்தரிக்காய் ஊதா நிறம்.


| | | |
|---|---|---|
| வெள்ளை | கறுப்பு | நீலம் |
| சிவப்பு | பச்சை | மஞ்சள் |
| | ஊதா | |

குறிப்பு : * வினாக்கள் கேட்டு நிறங்கள் தொடர்பான எண்ணக்கருவை மாணவர் மனங்களிற் பதியச் செய்க.

## சுவைகள்



கரும்பு இனிக்கும். **இனிப்பு**



மாங்காய் புளிக்கும். **புளிப்பு**




பாகற்காய் கசக்கும். **கசப்பு**



மிளகாய் உறைக்கும். **உறைப்பு**




உப்பு உவர்க்கும் **உவர்ப்பு**



பாக்கு துவர்க்கும். **துவர்ப்பு**

## ஒலிகள்




“கா கா” என்று கரையும்.



“கொக்கரக்கோ” என்று கூவும்.



“வள் வள்” என்று குரைக்கும்.



“கூ கூ” என்று கூவும்.



“ம்ஆ ம்ஆ” என்று கத்தும்.

# படிக்கப் போகிறேன்

குருவிக் குஞ்சே குருவிக் குஞ்சே
எங்கே போகிறாய் ?
கொத்திக் கொத்தித் தானியத்தைத்
தின்னப் போகிறேன்.

சின்ன அணில் பிள்ளை நீயும்
எங்கே போகிறாய் ?
வண்ண மாம்பழத்தை நானும்
தின்னப் போகிறேன்.


ஆட்டுக்குட்டி ஆட்டுக்குட்டி
எங்கே போகிறாய் ?
ஆலிலையும் கோரைப் புல்லும்
தின்னப் போகிறேன்.

செல்லப் பாப்பா செல்லப் பாப்பா
எங்கே போகிறாய் ?
பள்ளிக்கூடம் சென்று நானும்
படிக்கப் போகிறேன்.

# பேசுவோம் கேட்போம் பார்ப்போம்



தொலைபேசி
தொலைபேசியில் உரையாடலாம்.



வானொலி
வானொலியில் பாடல்களைக்
கேட்கலாம்.



தொலைக்காட்சி
தொலைக்காட்சியில்
நாடகங்களைப் பார்க்கலாம்.

குறிப்பு : * இவை போன்ற நவீன தொடர்பாடற் சாதனங்களை அறிமுகம் செய்க.

# கிழமைகள்

1. திங்கட்கிழமை
2. செவ்வாய்க்கிழமை
3. புதன்கிழமை
4. வியாழக்கிழமை
5. வெள்ளிக்கிழமை
6. சனிக்கிழமை
7. ஞாயிற்றுக்கிழமை

ஒரு கிழமையில் ஏழு நாள்கள் உண்டு.

வெள்ளிக்கிழமை புனித நாள் ஆகும்.

ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் ஆகும்.

# நான் யார் ?

1. எனது பெயர் ...............................

2. எனது வயது ...............................

3. என் அப்பா பெயர் .........................

4. என் அம்மா பெயர் ........................

5. நான் ............ என்னும் இடத்தில் வசிக்கிறேன்.

6. நான் .................. வகுப்பில் படிக்கிறேன்.

7. நான் விரும்பும் உணவு .....................

8. எனது செல்லப் பிராணி.......................

9. நான் விரும்பும் விளையாட்டு ..................

குறிப்பு : * சரியாகப் பூர்த்தி செய்ய தெளிவாக வழிப்படுத்துக.

# தமிழ் அரிச்சுவடி

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ |
| த் | த | தா | தி | தீ | து | தூ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ |

ஆய்த எழுத்து ஃ

| எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|
| கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| பெ | பே | பை | பொ | போ | பௌ |
| மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| னெ | னே | னை | னொ | னோ | னௌ |

# ஆத்தி சூடி

1. அறம் செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண், எழுத்து இகழேல்.
8. ஏற்பது இகழ்ச்சி.
9. ஐயம் இட்டு உண்.
10. ஒப்புரவு ஒழுகு.
11. ஓதுவது ஒழியேல்.
12. ஔவியம் பேசேல்.